This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# பெண் இயந்திரம்

காலைக் கதிரவனின் பொற்கிரணங்கள் சேஷாத்ரிபுரம் ஆறாவது மெயின் மூன்றாவது கிராஸ் வீட்டின் முதல் மாடி வாசற் கதவைத் தொட்டன. ஜன்னல் கம்பியில் உற்சாகமான குருவி 'க்றீச்'. ஹாலில் மின் விசிறியின் மேற்கோப்பையில் தான் கட்டவேண்டிய அபத்திரமான கூட்டுக்குப் பஞ்சு தேடிக் கொண்டிருந்தது. ஹாலில் படுத்திருந்த மூன்று போர்வைக் குன்றுகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து விலக்கிய அம்மா, "வித்யா! எழுந்திருடி" என்றாள். தங்கரதத்தில் சாஸ்திரி வந்து 'சங்கராபரணம் போகலாம் வா' என்று அழைத்துக் கொண்டிருந்த கட்டத்தில் கலைந்து வித்யா எழுந்தாள். கனவா நினைவா, என்று கணநேர அவஸ்தையில் வெற்றுப் பார்வை பார்த்துக் கொண்டிருந்தாள். "எழுந்திருடி. மணி ஏழாகப் போறது! பஸ் போயிடும்." வித்யா எழுந்திருந்து நடையில் இருந்த சிக்கனமான ஸிங்க்கில் பல் தேய்த்தாள். அப்பா அறுபது மீட்டரில் சென்னையை நெருடிக் கொண்டிருந்தார். அம்மா விஜியையும்–சுந்தரையும் எழுப்பி, "படி படிடா!" என்றாள். சமையல் அறை வாசலில் ஸ்டூல் மேல் காப்பி தயாராக இருந்தது. 'டெக்கான் ஹெரால்ட்' கீழே கிடந்து. 'இம்பாஸிபிள் இம்ஃபால்' என்றது. வித்யா காபி குடித்துவிட்டு இம்ஃபாலை எடுத்துக்கொண்டு 'பாத்ரூம்' சென்றாள். ரேடியோ 'தமிழ் மணம்' என்றது. பதினெட்டு நிமிஷம் இருக்கிறது, பஸ் வர. குளியல் அறையில் மொறமொறவென்று அவள் உள்ளுடைகள் தயாராக இருந்தன. பிளாஸ்டிக் பக்கெட்டில் இளஞ்சூட்டில் வெந்நீர் ததும்பியது. குடும்பத்தில் சம்பாத்திய ராணிக்கு சலுகைகள்.

'இவனு பஸவா இது பஸவன மனே' என்று சுந்தர் படிக்கும் குரல் தூக்கத்துடன் கலந்து கேட்டது.

வித்யா தன் உடைகளைக் களைந்தாள். மார்பைத் தொட்டுப் பார்த்துக் கொண்டாள். லேசாக வலியின் ஆரம்ப அறிகுறிகள். சாயங்காலம் இடுப்பில் வலிக்க ஆரம்பித்துவிடும். நாளை கத்தரித்தாற்போல் வலிக்கும்... சே! எத்தனை வருஷம்– 'அம்மா, ஓடிவாயேன்! ஓடிவாயேன்...' என்று அலறிய அந்த தினத்திலிருந்து...

'ஏ உடம்பே! உடம்பில் ஊறுகிற ஈஸ்ட்ரோஜன்களே... எதற்காக இந்த மாதாந்திர அவஸ்தை. எனக்குத்தான் இப்போது கல்யாணம் கிடையாதே...!'

சொர்க்கத்தில் தீர்மானம் நம்பர் 363; – வித்யாவின் மாதவிலக்கு ஆறு வருஷங்களுக்கு ஒத்திப் போடப்பட்டிருப்பதை இதனால் சகலரும் அறிக...

வெந்நீர் அவள் உடலைத் தொட்டது. ஜன்னல் கண்ணாடியை ஒரு கோணத்தில் திருப்பினாள். அப்படித் திருப்பினால் லேசாக அவள் பிம்பம் தெரியும்... தெரியக்கூட வேண்டாம். அவள் உடலில் ஒவ்வொரு தோற்றமும் அவளுக்கு நெட்டுரு!

வித்யா ஐந்தடி நாலு அங்குலம். 54.5 கேஜி. 'உங்கள் வாழ்வின் அடுத்த கட்டம் மிகுந்த பொறுப்புடனும் புதிய சினேகிதர்களுடனும் அமையும்...' நட்டநடுவே வகிடெடுத்து அதிகம் அடர்த்தியில்லாத ஆனால் சற்று நீளமான தலைமயிர். கறுப்பு என்று சொல்ல முடியாது. நிறைய நெற்றி. எப்போதும் சின்னதாகத்தான் பொட்டிடுவாள். பெரிதாகப் பொட்டிட்டால் ஏதோ ஒரு தாசித்தனம் வந்துவிடுவதாக நினைப்பு!